

கிழக்கு கல்வி நிலையம்

புதிய பாடத்திட்டம்

அறிவுத்தாரகை வெளியீடு

தரம் – 5

வினாத்தாள் - I

வினாத்தாள் I இற்கான பயிற்சிச் செயலட்டைகள் – 20

267 வினாக்கள்

விடைகளுடன்

ஆக்கம் :

ஆசிரியர்: ஏ.எம்.சனூஸ்

A.M.SANOOS

www.ikedu.lk

ஆசிரியரிடமிருந்து.....

இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்கொள்ளவுள்ள மாணவர்களே! நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மாணவர்களின் கற்றல் செயற்பாடு தடைப்பட்டுள்ளது. ஆகவே மாணவர்கள் வீட்டில் இருந்து கற்கக் கூடியவாறு தொடர்ச்சியாக 20 வினாப்பத்திரங்களை தயாரித்து ஒவ்வொரு நாளும் ஒன்றாக பரீட்சை நடாத்தி மாணவர்களை வழிநடாத்தினேன். இதன் மூலம் பயனடையாத மாணவர்களும் பயன்பெற வேண்டும் என்ற வகையில் இதனை பதிவிடுகிறேன். மாணவர்கள் இதன் மூலம் பயன்பெற வேண்டும் என்பதற்காக!

பெரும்பாலான பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் வேண்டுதலுக்கு இணங்க இச் செயலட்டைகளை தயாரித்துள்ளேன். எனது இந்த வளர்ச்சிக்குத் துணைபுரிந்த நான் பணியாற்றும் **பேருவளை அல்/ஹுமைஸரா தேசிய பாடசாலைக்கும், அப்பிரதேச பெற்றோர்களுக்கும்** எனது மனமார்ந்த நன்றியை கூறிக் கொள்கின்றேன். மேலும் இவ்வினாத்தாள்களை சரவை பார்த்து உதவிய என் மனைவி **A.C.F. mufeesa** ஆசிரியைக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். கனவு காணுங்கள் என மாணவர்களைத் தூண்டிய விஞ்ஞானி ஏ.பி.ஜே. அப்துல் கலாம் போல "என்னால் முடியும்" என்ற எண்ணத்தோடு வெற்றியை நோக்கி நகர்வோம்.

குறிப்பு : இதனை முறைகேடாக பயன்படுத்துபவர்கள் கொரோனா கிருமியை விட மோசமானவர்கள்.

இதிலுள்ள குறைகளை என்னிடமும் நிறைகளை ஏனையோரிடமும் சொல்லுங்கள்.

அன்புடன் ஆசிரியர்,
ஏ.எம். சனூஸ்
மட்டக்களப்பு.

தொடர்புகளுக்கு,
Multi Printers.
Rahmaniya school road,
Eravur.
Tel : 077 050 9619

A.M.SANOOS
www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை

5

செயலட்டை - 01

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. ஒரு பண்ணையில் உள்ள பசுக்களினது கால்களினதும் வால்களினதும் மொத்த எண்ணிக்கை 60 எனின், அங்குள்ள பசுக்கள் எத்தனை?

(1) 10 (2) 11 (3) 12

02. ஒரு மரத்தில் இருந்த கிளிகளின் தலைகள் 10 எனின், அவற்றின் கால்களினதும் அலகுகளினதும் மொத்த எண்ணிக்கை எத்தனை?

(1) 10 (2) 20 (3) 30

03. ஒரு பண்ணையில் ஆடுகளும் கோழிகளும் வளர்க்கப்பட்டன. அவற்றின் கால்களின் மொத்த எண்ணிக்கை 32 ஆகும். தலைகளின் எண்ணிக்கை 10 ஆகும். அவ்வாறெனில்,

(i) அங்குள்ள ஆடுகள் எத்தனை?

(1) 6 (2) 5 (3) 4

(ii) அங்குள்ள கோழிகள் எத்தனை?

(1) 6 (2) 5 (3) 4

04. ஒரு வாகன பழுது பார்க்கும் தொழிற்சாலை ஒன்றில் உள்ள கார்களினதும் மோட்டார் சைக்கிள்களினதும் மொத்த எண்ணிக்கை 17 ஆகும். அவற்றின் சில்லுகளின் மொத்த எண்ணிக்கை 54 ஆகும். எனின்,

(i) அங்கு நிறுத்தப்பட்டிருந்த கார்கள் எத்தனை?

(1) 7 (2) 10 (3) 17

(ii) அங்குள்ள மோட்டார் சைக்கிள்கள் எத்தனை?

(1) 7 (2) 10 (3) 17

05. ஓர் ஆட்டுக்கு மூன்று கால்கள் எனின் 3 ஆட்டுக்கு எத்தனை கால்கள் உண்டு?

(1) 9 (2) 11 (3) 12

06. ஒரு யானைக்கு ஒரு தந்தம் எனின் 4 யானைக்கு எத்தனை தந்தங்கள் உண்டு?

(1) 4 (2) 7 (3) 8

A.M.SANOOS
www.lkedu.lk

07. ஒரு மைதானத்தில் 11 கம்பங்கள் காணப்பட்டன. சில கம்பங்களில் இரண்டு கொடிகள் வீதமும் வேறு சில கம்பங்களில் மூன்று கொடி வீதமும் ஏற்றப்பட்டிருந்தன. ஏற்றப்பட்ட மொத்தக் கொடிகளின் எண்ணிக்கை 27 ஆகும்.

(i) இரண்டு கொடிகள் ஏற்றப்பட்ட கம்பங்கள் எத்தனை?

(1) 5 (2) 6 (3) 7

(ii) மூன்று கொடிகள் ஏற்றப்பட்ட கம்பங்கள் எத்தனை?

(1) 5 (2) 6 (3) 7

08. ஒரு தோட்டத்தில் 3 இதழ் பூக்களும் 4 இதழ் பூக்களுமாக மொத்தம் 13 பூக்கள் உள்ளன. அவற்றின் இதழ்களின் மொத்த எண்ணிக்கை 44 ஆகும். எனின்,

(i) அங்குள்ள 4 இதழ் பூக்கள் எத்தனை?

(1) 5 (2) 6 (3) 8

(ii) அங்குள்ள 3 இதழ் பூக்கள் எத்தனை?

(1) 5 (2) 6 (3) 8

09. கடையொன்றில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மொத்த மாம்பழங்களின் எண்ணிக்கை 18 ஆகும். சின்ன மாம்பழம் ஒன்று ரூ. 3 வீதமும், பெரிய மாம்பழம் ஒன்று ரூ. 5 வீதமும் மொத்தமாக ரூ. 68 இற்கு பழங்கள் வாங்கினேன்.

(i) நான் வாங்கிய சின்ன மாம்பழங்கள் எத்தனை?

(1) 7 (2) 10 (3) 11

(ii) நான் வாங்கிய பெரிய மாம்பழங்கள் எத்தனை?

(1) 7 (2) 10 (3) 11

10. ஒரு மாணவன் ஓர் அட்டையில் கோடுகள் வரைந்து முக்கோணிகளையும், ஐங்கோணிகளையும் வெட்டினான். அவன் வெட்டிய மொத்த தளவடிவங்கள் 15 ஆகும். அவனால் வரையப்பட்ட கோடுகளின் மொத்த எண்ணிக்கை 57 ஆகும்.

(i) அவன் வெட்டிய முக்கோணிகள் எத்தனை?

(1) 6 (2) 8 (3) 9

(ii) அவன் வெட்டிய ஐங்கோணிகள் எத்தனை?

(1) 6 (2) 8 (3) 9

11. ஒரு வீதியில் 10 மின்கம்பங்கள் உள்ளன. இரண்டு கம்பங்களுக்கு இடையில் 3 கொடி ஏற்றப்பட்டது. இங்கு ஏற்றப்பட்ட கொடிகள் எத்தனை?

(1) 33 (2) 30 (3) 27

A.M.SANOOS

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை

5

செயலட்டை - 02

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி புதன்கிழமை எனில், அம்மாதம் 29ஆம் திகதி என்ன கிழமை?

(1) திங்கள் (2) செவ்வாய் (3) புதன்

02. 2020ஆம் ஆண்டு யூன் மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை எனில், அம்மாதத்தின் 30வது நாள் என்ன கிழமை?

(1) சனி (2) ஞாயிறு (3) திங்கள்

03. 2018ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை எனின், அம்மாதம் 31ஆம் திகதி என்ன கிழமை?

(1) ஞாயிறு (2) திங்கள் (3) செவ்வாய்

04. சாதாரண வருடமொன்றில் டிசம்பர் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையாகும். எனின் அவ்வாண்டின்,

(i) ஜனவரி 29ஆம் திகதி என்ன கிழமை?

(1) திங்கள் (2) செவ்வாய் (3) புதன்

(ii) பெப்ரவரி 1ஆம் திகதி என்ன கிழமை?

(1) புதன் (2) வியாழன் (3) வெள்ளி

(iii) பெப்ரவரி கடைசி நாள் என்ன கிழமை?

(1) செவ்வாய் (2) புதன் (3) வியாழன்

05. 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் 5ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமையாகும். எனின், இம்மாதத்திலுள்ள சனிக்கிழமைகளின் எண்ணிக்கை எத்தனை?

(1) 3 (2) 4 (3) 5

06. 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், நடுவில் வரும் நாள் எது?

(1) ஞாயிறு (2) சனி (3) வெள்ளி

A.M.SANOOS
www.lkedu.lk

07. குறித்த ஆண்டின் 300ஆம் நாள் வியாழக்கிழமை ஆகும். அவ்வாண்டின் 15ஆம் நாள் என்ன கிழமை?

(1) சனி (2) ஞாயிறு (3) வியாழன்

08. 2017ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி சனி எனின், டிசம்பர் 31ஆம் திகதி என்ன கிழமை?

(1) வெள்ளி (2) சனி (3) ஞாயிறு

09. 2020ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி புதன்கிழமை எனின், டிசம்பர் 1ஆம் திகதி என்ன கிழமை?

(1) செவ்வாய் (2) புதன் (3) வியாழன்

10. 2019ஆம் ஆண்டு டிசம்பர் 29ஆம் திகதி வியாழன் ஆகும். எனின் அதே ஆண்டு ஜனவரி 30ஆம் திகதி என்ன கிழமை?

(1) திங்கள் (2) ஞாயிறு (3) சனி

11. 2008ஆம் ஆண்டில் 366 நாட்கள் உள்ளன. அவ்வாண்டில் 1ஆம் நாள் புதன் எனின், அவ்வாண்டில் எத்தனை வியாழக்கிழமைகள் உள்ளன?

(1) 50 (2) 52 (3) 53

12. 2013ஆம் ஆண்டு நடுவில் வரும் தினம் யாது?

(1) யூலை - 1 (2) யூலை - 2 (3) யூலை - 3

13. 2020ஆம் ஆண்டில் 29 நாட்களைக் கொண்ட மாதங்கள் எத்தனை உள்ளன?

(1) 1 (2) 11 (3) 12

14. லீப் வருடமொன்றின் 2ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை எனின் அவ்வருடத்தின்,

(i) 366ஆம் நாள் என்ன கிழமை?

(1) ஞாயிறு (2) திங்கள் (3) செவ்வாய்

(ii) 274ஆம் நாள் என்ன கிழமை?

(1) வெள்ளி (2) சனி (3) ஞாயிறு

(iii) 105ஆம் நாள் என்ன கிழமை?

(1) புதன் (2) வியாழன் (3) வெள்ளி

15. ஜனவரி மாதம் 1ஆம் திகதி வெள்ளி எனின், அம்மாதத்தில் இடம்பெறும் வியாழக்கிழமைகளினதும், வெள்ளிக்கிழமைகளினதும் எண்ணிக்கை முறையே,

(1) 4, 5 (2) 5, 4 (3) 5, 5

A.M.SANOOS

www.lkedu.lk

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை

5

செயலட்டை - 03

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. 10 படிகள் உள்ள ஒரு படிக்கட்டில் கரன் முதல் படியிலும், ஆரணி பத்தாம் படியிலும் நிற்கின்றனர். கரன் ஒரு படி ஏறும் போது, ஆரணி இரு படிகள் இறங்கினால், அவர்கள் இருவரும் எத்தனையாவது படியில் சந்திப்பர்?

(1) 6 (2) 5 (3) 4

02. 16 படிகள் கொண்ட படிக்கட்டில் மதுசா முதல் படியிலும், மதுரன் 16ஆம் படியிலும் நிற்கின்றனர். மதுசா மூன்று படிகள் வீதம் ஏறும் போது, மதுரன் இரு படிகள் வீதம் இறங்கினால், இருவரும் எந்தப்படியில் சந்திப்பர்?

(1) 9 (2) 10 (3) 11

● 16m நீளமுள்ள நேர்கோட்டின் ஒரு முனையில் A என்ற தவளையும், மறுமுனையீல் B என்ற தவளையும் நிற்கின்றன. தவளை A ஒரு பாய்ச்சல் ஒரு மீற்றர் பாயும் அதே வேளை தவளை B ஒரு பாய்ச்சலில் 2 மீற்றர் பாயும் எனில்,

03. தவளை A எவ்வளவு தூரத்தில் தவளை B யைச் சந்திக்கும்?

(1) 4 மீற்றர் (2) 5 மீற்றர் (3) 6 மீற்றர்

04. தவளை B எவ்வளவு தூரத்தில் தவளை A யைச் சந்திக்கும்?

(1) 10 மீற்றர் (2) 11 மீற்றர் (3) 12 மீற்றர்

05. அனுலா 16 படிகள் உள்ள ஏணிப்படியில் 16வது படியில் நிற்கின்றாள். குரு முதலாவது படியில் நிற்கின்றான். அனுலா ஒரு படி இறங்கும் போது குரு இரண்டு படிகள் ஏறினான் எனில், இருவரும் எந்தப்படியில் சந்திப்பர்?

(1) 10 (2) 11 (3) 12

06. 13 மீற்றர் உயரமுள்ள தூண் ஒன்றின் மீது தவளை ஒன்று ஏற முயற்சி செய்தது. இது 3மீற்றர் தாவும் போது ஒரு மீற்றர் சறுக்கும். இத்தவளை எத்தனையாவது பாய்ச்சலில் தூணின் உச்சியை அடையும்?

(1) 8 (2) 7 (3) 6

A.M.SANOOS
www.lkedu.lk

07. 120m தூரமுள்ள ஒரு பாதையில் முற்பக்கம் இருந்து சுதாவும், இறுதிப் பக்கமிருந்து சந்திரனும் எதிர், எதிர்த்திசைகளில் ஓடி வருகின்றனர். சுதா நிமிடத்துக்கு 10 மீற்றர் ஓடினால், சந்திரன் நிமிடத்திற்கு 5 மீற்றர் தூரமே ஓடுவான். இருவரும் எத்தனையாவது நிமிடத்தில் ஒருவரையொருவர் சந்திப்பர்?

(1) 6 (2) 7 (3) 8

08. 2m நீளமும், 1m அகலமும் கொண்ட செவ்வகம் ஒன்றின் நீளத்தையும், அகலத்தையும் ஒரு மடங்காக அதிகரித்தால், செவ்வகத்தின் பரப்பளவு யாது?

(1) 6 (2) 7 (3) 8

09. 4m நீளமும், 3m அகலமும் கொண்ட சுவரின் நீளத்தையும், அகலத்தையும் ஒரு மடங்காக அதிகரித்தால், தற்போது சுவரின் பரப்பளவு யாது?

(1) 24 சதுரமீற்றர் (2) 36 சதுரமீற்றர் (3) 48 சதுரமீற்றர்

10. 5m நீளமுடைய சதுரமொன்றின் நீளத்தையும், அகலத்தையும் ஒரு மடங்காக அதிகரித்தால், தற்போது சதுரத்தின் பரப்பளவு யாது?

(1) 100 சதுரமீற்றர் (2) 75 சதுரமீற்றர் (3) 50 சதுரமீற்றர்

11. 10m நீளமும், 8m அகலமும் கொண்ட சுவருக்குப் பூச 2 லீற்றர் தீந்தை தேவை. இச் சுவரின் நீளத்தையும், அகலத்தையும் ஒரு மடங்காக அதிகரித்தால், சுவருக்குப் பூச எவ்வளவு தீந்தை தேவை?

(1) 4 லீற்றர் (2) 8 லீற்றர் (3) 12 லீற்றர்

12. 7 மீற்றர் நீளமும், 3 மீற்றர் அகலமும் கொண்ட சுவரின் நீளத்தை ஒரு மடங்காக அதிகரித்தால், தற்போது சுவரின் பரப்பளவு எவ்வளவு?

(1) 42 சதுரமீற்றர் (2) 63 சதுரமீற்றர் (3) 84 சதுரமீற்றர்

13. ஒரு புகையிரதம் 85 வது கிலோமீற்றர் கல்லிலிருந்து 90 வது கிலோமீற்றர் கல்லைக் கடப்பதற்கு 5 நிமிடம் எடுத்தது. புகையிரதம் அதே கதியில் சென்றால் 110 வது கிலோமீற்றர் கல்லைக் கடப்பதற்கு மேலும் எவ்வளவு நிமிடம் தேவை?

(1) 30 (2) 20 (3) 10

14. ஒரு மோட்டார் சைக்கிள் 10km தூரத்தைக் கடப்பதற்கு 20 நிமிடம் எடுத்தது எனில், இதே கதியில் மோட்டார் சைக்கிள் சென்றால், 15km தூரத்தைக் கடப்பதற்கு எவ்வளவு நேரம் தேவைப்படும்?

(1) 10 நிமிடம் (2) 20 நிமிடம் (3) 30 நிமிடம்

15. ஆற்றின் நீர் மணிக்கு 4km வேகத்தில் பாய்கின்றது. மனிதன் ஒருவன் மணிக்கு 6km வேகத்தில், ஆற்றுநீர் ஓட்டத்திற்கு எதிராக நீந்துகின்றான்.அவன் நீந்திச் செல்லும் உண்மையான வேகம் மணித்தியாலத்திற்கு எத்தனை கிலோமீற்றர்?

(1) 2km (2) 4km (3) 6km

16. ஒரு மாணவன் 100m ஓட்டப்போட்டியில் முதல் 10m தூரத்தைக் கடப்பதற்கு 2 செக்கன் எடுத்தான். இவன் இதே கதியில் 100m தூரத்தையும் ஓடி முடிக்க எவ்வளவு நேரம் தேவை?

(1) 10 செக்கன் (2) 20 செக்கன் (3) 30 செக்கன்

AMSANOOS

www.lkedu.lk

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 04

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. ஒரு பூந்தோட்டத்தில் முதலில் மல்லிகைச் செடியும் அடுத்து ஒரு செவ்வந்திச் செடியும் மாறி மாறி ஒரே நேருக்கு நடப்பட்டது. அந்த வரிசையில் 19 செடிகள் இருந்தால், எத்தனை செவ்வந்திச் செடிகள் நடப்பட்டிருக்கும்?

(1) 9 (2) 10 (3) 18

02. ஒரு சதுர வடிவான காணியைச்சுற்றி பக்கத்திற்கு 6 தூண்கள் வீதம் நடப்பட்டது. எனின் காணியைச் சுற்றி நடப்பட்ட தூண்களின் எண்ணிக்கை?

(1) 20 (2) 24 (3) 28

03. ஒரு அதிசயக் கூடையில் உள்ள பழங்கள் ஒவ்வொரு நிமிடமும் இரட்டிப்பாகும். ஒரு மணித்தியாலத்தில் அக்கூடை நிரம்பி விட்டால் அக்கூடையில் அரைவாசி எப்போது நிரம்பிருக்கும்?

(1) 20 வது (2) 30 வது (3) 59 வது

04. 5 ஆண்கள் கொண்ட தொகுதியினர் ஒரு தோட்டத்தைச் சுத்தப்படுத்த எடுக்கும் நேரம் 6 மணித்தியாலங்களாகும். இதே வேலையை 6 ஆண்களைக் கொண்டு சுத்தப்படுத்த எடுக்கும் நேரம் யாது?

(1) 5 மணித்தியாலம் (2) 7 மணித்தியாலம் (3) 12 மணித்தியாலம்

05. ஒரு கூட்டில் 10 மஞ்சள் வர்ணக் குருவிகளும் 12 நீல வர்ணக் குருவிகளும் சில பச்சை வர்ணக் குருவிகளும் இருந்தன. அங்கு இருந்த பச்சை வர்ணக் குருவிகளின் எண்ணிக்கை மஞ்சள் வர்ணக் குருவிகளின் எண்ணிக்கையிலும் குறைவாகவே காணப்பட்டது. எனின், கூட்டிலிருந்த குருவிகளின் எண்ணிக்கை எத்தனை?

(1) 33 (2) 30 (3) 22

06. யாழினியும், பவானியும் ஒரே அளவான நிறையுடையவர்கள். சுமதி யாழினியை விட நிறை குறைந்தவள். சுந்தரி பவானியைக் காட்டிலும் நிறை கூடியவள். இவர்களுள் நிறை கூடியவள் யார்?

(1) பவானி (2) சுந்தரி (3) யாழினி

A.M.SANOOS
www.lkedu.lk

07. மார்ச் 18 இல் இருந்து யூன் 15 வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 84 நாட்கள் (2) 90 நாட்கள் (3) 91 நாட்கள்

08. தோடம்பழம் ஒன்று 5 ரூபாவும் அப்பிள் பழமொன்று 15 ரூபாவும் ஆகும். நான் மொத்தமாக 15 பழங்களை ரூபாய் 105 இற்கு வாங்கினேன். எனின், நான் வாங்கிய அப்பிள் பழங்கள் எத்தனை?

(1) 12 (2) 6 (3) 3

09. ஒரு மாணவன் 7 ஈர்க்குத் துண்டுகளைக் கொண்டு 3 சமபக்க முக்கோணிகளை உருவாக்கினான். இம்மாணவன் 6 முக்கோணிகளை உருவாக்க எத்தனை ஈர்க்குத் துண்டுகளை பயன்னடுத்தி இருப்பான்?

(1) 13 (2) 14 (3) 18

10. ஒரு முக்கோணியை அமைக்க 3 தீக்குச்சிகள் தேவைப்படும் எனின், 10 முக்கோணி அமைக்க தேவைப்படும் தீக்குச்சிகள் எத்தனை?

(1) 21 (2) 27 (3) 30

11. 5 சதுரங்களை அமைக்க 16 நேர் கோடுகள் தேவை. எனின் 3சதுரங்கள் அமைக்க எத்தனை நேர்கோடுகள் தேவை?

(1) 12 (2) 10 (3) 7

12. என்னிடமுள்ள பணத்தின் ஆறு மடங்குடன் ஐந்து ரூபாவைக் கூட்டுவேனாயின், அது கமலாவிடமுள்ள 65 ரூபாவுக்குச் சமனாகும். எனின் என்னிடமுள்ள பணம் எவ்வளவு?

(1) ரூ.10 (2) ரூ.12 (3) ரூ.15

13. ரமேஷின் வயது 17, ராஜேஸ் ரமேஷிலும் இரண்டு வயது கூடியவன். ராஜு ராஜேஸைக் காட்டிலும் ஐந்து வயது குறைந்தவன். ஏழு வருடங்களின் பின் ராஜுவின் வயது யாது?

(1) 14 (2) 19 (3) 21

14. நான்கு சவர்க்காரம் வாங்கும் ஒருவருக்கு ஒரு சவர்க்காரம் மேலதிகமாக வழங்கப்படும் எனக் கடைக்காரர் கூறிக் கொண்டு வியாபாரம் செய்தார். அப்போது அங்கு வந்த முகுந்தன் 15 சவர்க்காரக் கட்டிகளை வாங்கினான். எனின், முகுந்தன் சவர்க்காரம் வாங்குவதற்குச் செலவழித்த பணம் எவ்வளவு? (ஒரு சவர்க்காரம் ரூ.35 எனக் கொள்க)

(1) ரூ.525 (2) ரூ.420 (3) ரூ.375

15. ஐந்தாவது சதுர எண்ணுக்கும் மூன்றாவது முக்கோண எண்ணுக்கும் இடையில் எத்தனை இரட்டை எண்கள் உள்ளது?

(1) 8 (2) 9 (3) 10

A.M.SANOOS

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை

செயலட்டை - 05

5

சுட்டெண் : ..... 30 நிமிடம்

01. சொற்திறனும் மொழித்திறனும்

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஐந்து சொற்களில் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றிலிருந்து வித்தியாசமானது. அச்சொல்லைத் தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

01. விளாம்பழம், மாதுளை, தக்காளி, மாம்பழம், அன்னாசி

02. அப்பா, பாட்டி, பூட்டன், கணவன், அப்பப்பா

03. கதிரை, மேசை, வாங்கு, பலகை, கதவு

04. இடியப்பம், சோறு, பிட்டு, கொழுக்கட்டை, இட்லி

05. அன்பு, கருணை, கோபம், இரக்கம், பாசம்

♦ கீழே தரப்பட்டுள்ள சோடிச் சொற்களுக்குப் பொருத்தமான தொடர்புடைய சோடிச் சொல்லைத் **தெரிவு செய்க.**

06. கை : விரல்

(1) கால்கள் : காற்சட்டை (2) பூ : இதழ் (3) புத்தகம் : உறை

07. பழம் : சுவை

(1) பாகல் : விதை (2) குளிர் : சூடு (3) விளக்கு : ஒளி

08. நாய் : நன்றி

(1) குழந்தை : விளையாட்டு (2) குயில் : பாட்டு (3) நரி : தந்திரம்

09. கொத்தன் : மணியாசு

(1) கொல்லன் : சீவுளி (2) தச்சன் : கைவாள் (3) மீனவன் : மீன்

10. இன்பம் : துன்பம்

(1) இருள் : இரவு (2) ஒலி : ஓசை (3) உயர்வு : தாழ்வு

02. எண் கோலங்கள்

11.

04	(11)	7	(1)	30
10	(16)	6	(2)	33
11	(....)	22	(3)	36

12.

16	(64)	80	(1)	54
12	(....)	96	(2)	84
40	(56)	96	(3)	108

13.

9 * 8 = 8116	(1)	1436
8 * 7 = 6414	(2)	3614
7 * 6 = ...	(3)	4912

14.

3	9	....	19
2	5	1	8
3	7	8	18
8	21	16	45

(1) 6
(2) 7
(3) 8

15.

8	x	3	=	26	(1) 140
16	x	5	=	82	(2) 142
20	x	7	=	....	(3) 147

A.M.SANOOS
www.lkedu.lk

16. இப்போது எனக்கு வயது 11 ஆண்டுகள் ஆகும். எனது தம்பியின் வயது 4 ஆண்டுகள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் எனது வயது, தம்பியின் வயதை விட இரு மடங்காக இருக்கும்?

(1) 3 வருடங்கள் (2) 4 வருடங்கள் (3) 8 வருடங்கள்

17. ஒரு சங்கத்தில் 10 பேர் உறுப்பினராக உள்ளனர். அவர்கள் மாதத்திற்கு ஒரு தடவை ஒழுங்கு முறையில் ஒவ்வொரு உறுப்பினரின் வீட்டில் கூடுவர். திரு. குணசேகரின் வீட்டில் சென்ற மார்ச் மாதம் கூட்டம் நடைபெற்றது. திரு குணசேகரின் வீட்டில் அடுத்த கூட்டம் எந்த மாதத்தில் நடைபெறும்?

(1) ஜனவரி (2) டிசம்பர் (3) நவம்பர்

18. சரவணுக்கு இப்போது வயது 9 ஆண்டுகளாக இருக்கும் போது சமீனின் வயது 13 ஆண்டுகளாகும். சமீனின் வயது சரவணனின் வயதை விட இரு மடங்காக இருந்த போது சமீனின் வயது எத்தனை ஆண்டுகளாகும்?

(1) 4 ஆண்டுகள் (2) 6 ஆண்டுகள் (3) 8 ஆண்டுகள்

19. சரவணனின் வயதை விட சமீனின் வயது மூன்று மடங்காக இருந்த போது சரவணனின் வயது எத்தனை ஆண்டுகளாகும்?

(1) 2 ஆண்டுகள் (2) 6 ஆண்டுகள் (3) 8 ஆண்டுகள்

20. இல்ல விளையாட்டுப் போட்டியிலே மறவர் இல்லம் சூரர் இல்லத்தை விட அதிக புள்ளிகளைப் பெற்றாலும் வீரர் இல்லத்தை விட மிகக்குறைந்த புள்ளிகளையே பெற்றிருந்தது. இப்போட்டியில் முதலாம், இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்ற இல்லங்களை வரிசைப்படுத்துக?

(1) சூரர், வீரர், மறவர் (2) வீரர், சூரர், மறவர் (3) வீரர், மறவர், சூரர்

21. ராணி, சுதன், சீதா, இராமன் ஆகியோர் ஒரு பரீட்சைக்குத் தோற்றினார்கள். இராமனை விட 5 புள்ளிகள் கூடுதலாக ராணி பெற்றதுடன் சீதா சுதனை விட 10 புள்ளிகள் குறைவாகப் பெற்றிருந்தார். ராணியும் சீதாவும் சமமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர் யார்?

(1) சீதா (2) இராமன் (3) சுதன்

22. சீதா பெற்ற புள்ளிகளின் மொத்தம் 48 எனின், இரமான் பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை யாது?

(1) 43 (2) 53 (3) 56

23. பகல் வேளை ஒன்றில் ஒரே நேரத்தில் 6m உயரமுள்ள கம்பம் ஒன்றின் நிழல் 4m ஆகும். அருகில் உள்ள மற்றொரு கம்பத்தின் நிழல் 16m எனின் கம்பத்தின் உயரம் எத்தனை மீற்றர்?

(1) 30m (2) 24m (3) 18m

24. நாளை மறுதினம் 16ஆம் திகதி வியாழக்கிழமை ஆகும். நேற்று முந்தினம் ஞாயிற்றுக் கிழமை ஆனந்தி தனது பிறந்த நாளைக் கொண்டாடினாள். எனின், இன்று என்ன கிழமை?

(1) திங்கள் (2) செவ்வாய் (3) புதன்

A.M.SANOOS

www.lkedu.lk

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 06

சுட்டெண் : ..... 30 நிமிடம்

01. என்னிடம் சம நீளமுள்ள ஈர்க்குத் துண்டுகள் உள்ளன. நான் அவ் ஈர்க்குத் துண்டுகளால் ஒன்றோடு ஒன்று இணைந்த இரண்டு முக்கோண வடிவங்களும், இரண்டு சதுர வடிவங்களும் அமைத்த பின் மூன்று ஈர்க்கில் துண்டுகள் மீதியாக இருந்தன. அதன்படி என்னிடம் இருந்த ஈர்க்குத் துண்டுகளின் எண்ணிக்கை யாது?

(1) 17 (2) 15 (3) 13

02. என்னிடம் உள்ள பணம் ரூ. 15 ஆகும். எனது தம்பியிடம் உள்ள பணம் ரூ. 7 ஆகும். என்னிடமும் தம்பியிடமும் உள்ள பணத்தொகை சமனாவதற்கு நான் தம்பியிடம் எவ்வளவு கொடுக்க வேண்டும்?

(1) ரூ. 4 (2) ரூ. 8 (3) ரூ. 11

03. இரு எண்களின் பெருக்கம் 45 ஆகும். மேலும் அவற்றை வகுக்கும் போது 5 ஆகவும், அவற்றிற்கு இடையிலான வித்தியாசம் 4 இன் மடங்காகவும் இருப்பின் அந்த இரு என்களும் எவை?

(1) 9, 5 (2) 5, 15 (3) 3, 15

04. சமனும் சுமனும் உயரத்தில் சமமானவர்கள். சந்துருவை விட சுமன் உயரமானவன். அதன்படி உயரத்தில் மிகக் குறைந்தவன் யார்?

(1) சுமன் (2) சமன் (3) சந்துரு

05. ஒரு தாயக்கட்டை 12 தடவைகள் சுண்டிவிடப்பட்டது. அதில் இலக்கம் 6 விழுந்த தடவைகளின் எண்ணிக்கை இலக்கம் 3 விழுந்த தடவைகளின் எண்ணிக்கை போல் இரண்டு மடங்கு ஆகும். அதன்படி தாயக்கட்டையில் இலக்கம் 6 விழுந்த தடவைகளின் எண்ணிக்கை எத்தனை?

(1) 5 (2) 6 (3) 8

06. சுமதியின் தற்போதைய வயது 10 ஆகும். இவளது வயதிற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் இவளது தங்கையின் வயது இரண்டு மடங்கு சுமதியின் வயதாகும். எனின், சுமதியின் தங்கையின் தற்போதைய வயது என்ன?

(1) 6 (2) 8 (3) 10

A.M.SANOOS
www.lkedu.lk

07. முனியாண்டி இரு கிளிகளை வளர்த்து வந்தான். ஒரு கிளி 3 நிமிடத்துக்கு ஒரு முறை முனி எனவும் மற்றைய கிளி 4 நிமிடத்துக்கு ஒரு முறை முனி எனவும் அழைக்கும். இரு கிளிகளும் காலை 8.00 மணிக்கு ஒன்றாக முனி என்று அழைத்தால் மறுபடியும் எத்தனை மணிக்கு முனி என்று அழைக்கும்?

(1) காலை 8.12 (2) இரவு 8.12 (3) காலை 8.24

08. பாடசாலையொன்றில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு 30 நிமிடத்துக்கு ஒருமுறையும், இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்கு 45 நிமிடங்களுக்கு ஒரு முறையும் மணி ஒலிக்கும். காலை 7.30 இற்கு இரு பிரிவுகளுக்கும் ஒன்றாக மணி ஒலித்தால் மறுபடியும் எத்தனை மணிக்கு ஒன்றாக மணி ஒலிக்கும்?

(1) காலை 8.15 (2) காலை 9.00 (3) காலை 11.00

09. ஒரு கிணற்றிலிருந்து தவளை 6 நிமிடத்துக்கு ஒரு தடவையும், மற்றுமொரு தவளை 4 நிமிடங்களுக்கு ஒரு தடவையும் கிணற்றிலிருந்து மேலே பாய எத்தனிக்கும். இரு தவளையும் மாலை 5.30 இற்கு மேலே வருவதற்கு ஒன்றாக எத்தனித்தது. எனின், மறுபடியும் எத்தனை மணிக்கு மேலே வருவதற்கு எத்தனிக்கும்?

(1) மாலை 5.54 (2) மாலை 5.42 (3) காலை 5.42

10. ஐந்து நண்பர்களின் வயதுகளின் கூட்டுத்தொகை 75 ஆகும். 4 வருடங்களுக்கு முன் ஐந்து நண்பர்களின் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

(1) 80 (2) 71 (3) 55

11. மூன்று நண்பர்களின் வயதுகளின் கூட்டுத்தொகை மூன்று ஆண்டுகளுக்கு முன் 21 ஆகும். எனின் இன்னும் மூன்று வருடங்களில் மூன்று நண்பர்களினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

(1) 39 (2) 30 (3) 24

12. நான்கு நண்பர்களின் வயதுகளின் கூட்டுத்தொகை 2 வருடங்களுக்குப் பின் 45 ஆகும். இரண்டு வருடங்களுக்கு முன் நான்கு நண்பர்களினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?

(1) 41 (2) 37 (3) 29

13. தந்தையின் தற்போதைய வயது மகனின் வயதைப் போல் 7 மடங்காகும். தந்தையின் வயது 63 எனின், மகனின் வயது யாது?

(1) 7 (2) 8 (3) 9

A.M.SANOOS

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020


அறிவுத்தாரகை 5

செயலட்டை - 07

சுட்டெண் : ..... 30 நிமிடம்


● சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

01.




(1) 28
(2) 30
(3) 32

02.




(1) 14
(2) 12
(3) 10

03.




(1) 64
(2) 68
(3) 72

04.



(1) 5
(2) 8
(3) 10


05.



(1) 7
(2) 9
(3) 12

A.M.SANOOS
www.lkedu.lk

06.





(1) 6


(2) 7

(3) 9

07.









(1) 6


(2) 7

(3) 8

08.









(1) 18, 22


(2) 19, 22

(3) 20, 22

09.










(1) 12 (2) 13 (3) 14

10.








(1) 26

(2) 28

(3) 30

11.



(1) 5

(2) 6

(3) 7

A.M.SANOOS
www.lkedu.lk

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை

5

செயலட்டை - 08

சுட்டெண் : ..... 30 நிமிடம்


- அணிதா வாங்கிய பழங்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது. அதன்படி மாதுளம்பழத்தின் விலை மாம்பழத்தின் விலையில் இரு மடங்காகும். மாதுளம்பழத்தின் விலைக்கு ஒரு அன்னாசிப்பழம் சமனாகும். ஒரு பப்பாசிப்பழம் வாங்கும் பணத்தில் இரண்டு கொய்யாப்பழம் வாங்கலாம்.



ரூபாய் 180.00



ரூபாய் 100.00



ரூபாய் 210.00

01. ஒரு தோடம்பழத்தின் விலை யாது?

(1) ரூபா 55.00 (2) ரூபா 65.00 (3) ரூபா 45.00

02. ஒரு மாதுளம்பழத்தின் விலை யாது?

(1) ரூபா 130.00 (2) ரூபா 120.00 (3) ரூபா 140.00


03. இரண்டு பப்பாசிப்பழத்தின் விலை யாது?

(1) ரூபா 150.00 (2) ரூபா 170.00 (3) ரூபா 180.00

- கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து விடையைத் தெரிவு செய்க.



ரூபா 100.00



ரூபா 150.00



ரூபா 80.00

04. தொப்பியின் விலை எவ்வளவு?

(1) ரூபா 30.00 (2) ரூபா 40.00 (3) ரூபா 50.00

A.M.SANOOS
www.lkedu.lk

05. 


மொத்தப் பெறுமதி எவ்வளவு?

(1) ரூபா 60.00 (2) ரூபா 70.00 (3) ரூபா 80.00

06. மூன்று பற்தூரிகை வாங்கும் பணத்திற்கு எத்தனை கண்ணாடி வாங்க முடியும்?

(1) 2 (2) 3 (3) 4


- பின்வரும் உருக்களின் உதவியுடன் விடையைத் தெரிவு செய்க.



ரூபா 90.00



ரூபா 115.00



ரூபா 80.00

07. அப்பிள்பழம் ஒன்றின் விலை யாது?

(1) ரூபா 30.00 (2) ரூபா 40.00 (3) ரூபா 50.00

08. 

இன் விலை எவ்வளவு?

(1) ரூபா 75.00 (2) ரூபா 90.00 (3) ரூபா 100.00

09. 

இன் விலை யாது?

(1) ரூபா 65.00 (2) ரூபா 75.00 (3) ரூபா 85.00

10. நான்கு பெயாஸ்பழம் வாங்கும் பணத்திற்கு எத்தனை தோடம்பழங்கள் வாங்க முடியும்?

(1) 3 (2) 4 (3) 5

- இரண்டு அப்பிள்பழங்களினதும் மூன்று கொய்யாப்பழங்களினதும் விலை ரூ. 170 ஆகும். ஓர் அப்பிள்பழத்தின் விலை ஒரு கொய்யாப்பழத்தின் விலையிலும் பார்க்க ரூ. 10 அதிகமாகும். எனின்,

11. கொய்யாப்பழமொன்றின் விலை எவ்வளவு?

(1) ரூ. 20.00 (2) ரூ. 30.00 (3) ரூ. 40.00

12. அப்பிள்பழமொன்றின் விலை எவ்வளவு?

(1) ரூ. 40.00 (2) ரூ. 50.00 (3) ரூ. 60.00

A.M.SANOOS
www.lkedu.lk

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை

5

செயலட்டை - 09

சுட்டெண் : ..... 30 நிமிடம்

- **சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.**

01. அது ஒரு பொருள் அல்ல. இதைப் பார்க்க முடியாது. உணர முடியும். எல்லா இடங்களிலும் உண்டு. இது இல்லாவிட்டால் வாழ முடியாது. அப் பொருள்,

(1) வியர்வை (2) காற்று (3) நீர்

02. இது ஒரு பறவை இனம். அது கறுப்பு நிறம். கூட்டமாக வாழக்கூடியது. வீட்டில் வளர்க்கப்படாத ஒரு பறவை,

(1) குயில் (2) காகம் (3) மைனா

03. பின்வரும் நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழியைத் தெரிவு செய்க.

பணம் இல்லாது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு நண்பன் ஒருவன் தன்னிடமிருந்த பணத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தான்.

(1) ஆசை வெட்கம் அறியாது
(2) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்
(3) அன்பான நண்பனை ஆபத்தில் அறி

04. கீதா பணக்கார வீட்டுப் பிள்ளை. அவள் சிறுவர் சஞ்சிகைகள், சித்திரக் கதைகள் எனப் பலவற்றைப் பாடசாலைக்குக் கொண்டு வருவாள். அவற்றை ஏனைய மாணவர்களுக்குக் காட்டுவாள். ஆனாலும், யாருக்கும் வாசிக்கக் கொடுக்க மாட்டாள்.
அவளைப் பற்றிக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமானது?

(1) பொதுநலவாதி (2) சுயநலவாதி (3) உலோபி

05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும் போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது. இதற்குக் காரணம்,

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை
(2) இரவில் கிளிகள் பறந்து செல்லவேண்டிய தேவை இல்லை
(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை

A.M.SANOOS
www.ikedu.lk

06. வினோதினியின் வீடு குமுதாவின் வீட்டிற்குக் கிழக்கே உள்ளது. குமுதாவின் வீடு சுகந்தியின் வீட்டிற்குக் கிழக்கே உள்ளது. ஆகவே,

(1) வினோதினியின் வீடு சுகந்தியின் வீட்டிற்குக் கிழக்கே உள்ளது.

(2) சுகந்தியின் வீடு வினோதினியின் வீட்டிற்கு அண்மையில் உள்ளது.

(3) சுகந்தியின் வீடு குமுதாவின் வீட்டிலும் பார்க்க வினோதினியின் வீட்டிற்கு அண்மையில் உள்ளது.

07. சாருமதியின் அண்ணன் பொது அறிவு வினாக்களுக்கு விடையளிப்பதில் மிகவும் கெட்டிக்காரன். அவனை எவராலும் தோற்கடிக்க முடியாது. ஒரு நாள் சாருமதியின் வீட்டிற்கு வந்த நண்பியின் தங்கை கேட்ட கேள்விக்கு சாருமதியின் அண்ணனால் விடை கூற முடியவில்லை.

இந் நிகழ்வுக்குப் பொருத்தமான பழமொழி எது?

(1) நிறைகுடம் தளம்பாது

(2) ஆனைக்கும் அடி சறுக்கும்

(3) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

08. "அடம்பன்கொடியும் திரண்டால் மிடுக்கு" என்ற பழமொழியின் கருத்து,

(1) விடாமுயற்சி பலன் தரும்

(2) பலசாலியும் தோல்வியடையலாம்

(3) ஒற்றுமையே பலம்

09. காலைக்கு மாலை என்பது போல பிறப்புக்கு .....

(1) வாழ்க்கை (2) இறப்பு (3) முயற்சி (4) படிப்பு

10. தாகத்திற்கு தண்ணீர் போல நோய்க்கு .....

(1) மருந்து (2) விருந்து (3) தண்ணீர் (4) சோறு

11. எழுத்தானிக்கு ஏடு போல வெண்கட்டிக்கு .....

(1) வெண்பலகை (2) கற்பலகை (3) கரும்பலகை (4) சுண்ணம்

12. சித்திரைக்கு வைகாசி போல வியாழனுக்கு .....

(1) நாள் (2) சனி (3) கிழமை (4) வெள்ளி

13. துக்கத்திற்கு கறுப்பு என்பது போல சமாதானத்திற்கு .....

(1) நீலம் (2) வெள்ளை (3) சிவப்பு (4) பச்சை

A.M.SANOOS

www.lkedu.lk

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 10

சுட்டெண் : ..... 30 நிமிடம்

- **சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.**

01. மூன்று பென்சில்களினதும் நான்கு பேனைகளினதும் விலை ரூ. 54 ஆகும். கடைக்குச் சென்ற கண்ணன் 9 பென்சில்களையும் 12 பேனைகளையும் வாங்கினான். இதற்காக கடைக்காரருக்கு ரூ. 100 ஐக் கொடுத்தான். எனின், கண்ணன் கடைக்காரருக்கு மேலும் எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்?

(1) ரூ. 162.00 (2) ரூ. 62.00 (3) ரூ. 46.00

02. 25 டொபிகளினதும் 15 சொக்லட்களினதும் விலை ரூ. 125 ஆகும். கடைக்குச் சென்ற நாதன் 4 டொபிகளையும் 5 சொக்லட்டுக்களையும் வாங்கினால் எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்? (டொபி ஒன்று ரூ. 2 எனக் கொள்க.)

(1) ரூ. 33.00 (2) ரூ. 25. 00 (3) ரூ.23.00

03. ஒரு மரத்தை 5 துண்டுகளாக வெட்டுவதற்கு ரூ. 200 கூலி வழங்கப்படும். ஒருவர் 10 மரங்கள் வெட்டினால் அவருக்குக் கிடைக்கும் கூலி எவ்வளவு?

(1) ரூ. 400 (2) ரூ. 1000 (3) ரூ. 2000

04. 8 மாம்பழங்களின் விலை ரூ. 200 ஆகும். மீனா ரூ. 500 பணத்தாளைக் கொடுத்து 12 மாம்பழங்கள் வாங்கினால் அவளுக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

(1) ரூ. 200 (2) ரூ. 260 (3) ரூ. 300

05. ஒரு வட்ட மேசையைச்சுற்றி 5 கதிரைகள் உள்ளன. இரண்டு கதிரைகளுக்கு இடையில் ஒரு தண்ணீர் போத்தல் வைக்கப்பட்டது. அங்கு வைக்கப்பட்ட தண்ணீர் போத்தல்களின் எண்ணிக்கையாக இருக்கக் கூடியது?


(1) 3 (2) 4 (3) 5

06. ஒரு நீளமான கம்பியில் மூன்று துண்டுகள் வெட்டுவதற்கு ரூ. 160 வழங்கப்படும். எனின், வெட்டிய தடவை ஒன்றுக்கு வழங்கப்படும் பணம் எவ்வளவு?

(1) ரூ. 50.00 (2) ரூ. 60.00 (3) ரூ. 80.00

A.M.SANOOS
www.lkedu.lk

● ஒரு எறும்பு A இலிருந்து B வரை பயணித்த பயணப்பாதை கீழே வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு விடை தருக.



07. எறும்பு A இலிருந்து B இற்குச் செல்லும் போது மேற்குத் திசையூடாகச் சென்ற தடவைகள் எத்தனை?

(1) 2 (2) 3 (3) 4

08. எறும்பு A இலிருந்து B இற்குச் செல்லும் போது மேற்குத் திசையூடாகச் சென்ற தடவைகளுக்கும் கிழக்குத் திசையூடாகச் சென்ற தடவைகளுக்கும் இடையிலுள்ள எண்ணிக்கை பற்றி கூறக்கூடியது?

(1) மூன்று (2) மூன்றிலும் குறைவு (3) மூன்றிலும் அதிகம்

09. எறும்பு A இலிருந்து B இற்குச் செல்லும் போது இடப்பக்கமாக சென்ற தடவைகள் எத்தனை?

(1) 4 (2) 5 (3) 6

10. எறும்பு A இலிருந்து B இற்குச் செல்லும் போது வலப்பக்கமாகச் சென்ற தடவைகள் எத்தனை?

(1) 4 (2) 5 (3) 6

11. அலுவலகம் முடிந்து வீட்டுக்குச் செல்லும் போது எனது நிழல் என்னைப் பின் தொடர்ந்தது. ஆகவே நான்,

(1) கிழக்குத் திசையூடாக பயணிக்கிறேன்.

(2) மேற்குத் திசையூடாக பயணிக்கிறேன்.

(3) வடக்குத் திசையூடாக பயணிக்கிறேன்.

A.M.SANOOS
www.lkedu.lk

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 11

சுட்டெண் : ..... 30 நிமிடம்

- **ஒற்றை எண் காணல்**

01. 10 வது ஒற்றை எண் யாது?

(1) 21 (2) 19 (3) 17

02. 1 - 12 வரையுள்ள ஒற்றை எண்களின் கூட்டுத் தொகை யாது?

(1) 20 (2) 25 (3) 36

03. 1 - 13 வரையுள்ள ஒற்றை எண்களின் கூட்டுத் தொகை யாது?

(1) 36 (2) 49 (3) 56

04. 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் உள்ள ஒற்றை எண்களின் கூட்டுத் தொகை யாது?

(1) 225 (2) 240 (3) 256

- **இரட்டை எண் காணல்**

05. 4 வது இரட்டை எண் யாது?

(1) 8 (2) 10 (3) 12

06. 1 - 10 வரையுள்ள இரட்டை எண்களின் கூட்டுத் தொகை யாது?

(1) 20 (2) 25 (3) 30

07. 1 - 25 வரையுள்ள இரட்டை எண்களின் கூட்டுத் தொகை யாது?

(1) 144 (2) 156 (3) 169

08. 5வது இரட்டை எண்ணுக்கும் 10வது இரட்டை எண்ணுக்கும் இடையில் எத்தனை இரட்டை எண்கள் உள்ளன?

(1) 6 (2) 5 (3) 4

- **முக்கோண எண் காணல்**

09. 4 வது முக்கோண எண் யாது?

(1) 20 (2) 12 (3) 10

10. 6 வது முக்கோண எண் யாது?

(1) 42 (2) 21 (3) 15

11. மே மாதத்தில் வரும் முக்கோண எண்கள் எத்தனை?

(1) 6 (2) 7 (3) 8

12. 1 - 50 வரையுள்ள எண்களுள் ஒற்றை, இரட்டை முக்கோண எண்கள் இடம்பெறும் எண்ணிக்கை முறையே,

(1) 5, 4 (2) 4, 5 (3) 5, 6

A.M.SANOOS

www.ikedu.lk

● **சதுர எண் காணல்**

13. 7 வது சதுர எண் யாது?

(1) 25 (2) 36 (3) 49

14. 1 இற்கும் 100 இற்கும் இடைப்பட்ட என்னும் எண்களுள் சதுர எண்கள் இடம்பெறும் தடவைகள் எத்தனை?

(1) 8 (3) 9 (3) 10

15. 1, 4, 9, ... என்ற ஒழுங்கில் சதுர எண்கள் அதிகரித்துச் சென்றால் 10 வது இடத்தில் வரவேண்டிய எண் யாது?

(1) 81 (2) 100 (3) 121

16. 8 வது சதுர எண் 64 ஆகும். 4 வது சதுர எண் 16 ஆகும். எனின் 121, எத்தனையாவது சதுர எண்?

(1) 10 (2) 11 (3) 13

● **கைகுலுக்கல், வாழ்த்து அட்டை**

17. விருந்துக்கு வருகை தந்த உறவினர்கள் 6 பேர் தங்களுக்குள் கைகுலுக்கிக் கொண்டனர். இங்கு இடம் பெற்ற கைகுலுக்கல்கள் எத்தனை?

(1) 20 (2) 15 (3) 10

18. உதைப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கெண்ட ஓர் அணி ஏனைய ஆறு அணிகளுடனும் போட்டியிட்டது. அனைத்து அணிகளும் ஏனைய அணிகளுடன் போட்டியிட்டன. இங்கு இடம்பெற்ற போட்டிகள் எத்தனை?

(1) 15 (2) 21 (3) 42

19. தமிழ் சித்திரைப் புத்தாண்டுக்காக 5 நண்பர்கள் தங்களுக்குள் வாழ்த்துச் செய்திகளை குறுந்தகவல் மூலம் பரிமாறிக் கொண்டனர். இங்கு இடம்பெற்ற குறுந்தகவல்கள் எத்தனை?

(1) 6 (2) 12 (3) 20

20. பெருநாள் வாழ்த்தைத் தெரிவிக்க 3 நண்பர்கள் தங்கள் வாழ்த்து அட்டைகளை பரிமாறிக் கொண்டனர். ஒரு வாழ்த்து அட்டை அனுப்புவதற்கு ரூபா 20 செலவாகும் எனின், மூவருக்கும் செலவாகிய மொத்தப் பணம் எவ்வளவு?

(1) ரூபா 40 (2) ரூபா 60 (3) ரூபா 120

21. 3, 8, 13 என்ற எண்தொடர் ஒழுங்கில் 11 வது எண் எத்தனை?

(1) 53 (2) 54 (3) 56

22. ஓர் எண் தொடரில் 9 வது எண் 44 ஆகும். அடுத்துள்ள எண்கள் 4 ஆல் அதிகரித்துச் சென்றால், 1 வது எண் யாது?

(1) 12 (2) 8 (3) 4

23. ஓர் எண் தொடரில் 10 வது எண் 55 ஆகும். 1 வது எண் 10 ஆகும். இங்கு அடுத்துள்ள ஒவ்வொரு எண்களும் எத்தனை வித்தியாசத்தால் அதிகரிக்கின்றது?

(1) 3 (2) 4 (3) 5

AMSANOOS
www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை செயலட்டை - 12

5

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● **கணிதத் திறன்.**

01. எனது வயதினதும் எனது மூன்று சகோதர்களின் வயதுகளினதும் கூட்டுத்தொகை 30 வருடங்களாகும். இன்னும் மூன்று வருடங்களில் எங்கள் நால்வரினதும் வயதுகளினது கூட்டுத்தொகை யாது?

(1) 42 (2) 40 (3) 38

02. மூன்று சிற்பிகள் மூன்று மணித்தியாலங்களில் மூன்று சிலைகளை செதுக்குவார்கள். ஆகவே ஒரு சிற்பி ஒரு சிலையை செதுக்குவதற்கு எத்தனை மணித்தியாலங்கள் செலவாகும்?


(1) 1 மணித்தியாலம்

(2) 2 மணித்தியாலங்கள்

(3) 3 மணித்தியாலங்கள்

03. வகுப்பு ஒன்றில் உள்ள மாணவர்களில் 12 மாணவர்கள் இறைச்சி உணவை விரும்பி உண்டார்கள். 8 மாணவர்கள் தாவர உணவுகளை விரும்பி உண்டார்கள். இவர்களுள் 3 மாணவர்கள் இரு வகையான உணவுகளையும் விரும்பி உண்டார்கள்.

மேலுள்ள தகவல்களை கீழுள்ள வெண்வெரிப்படத்திலுள்ள புள்ளிக் கோட்டின் மீது குறிக்கும் போது வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.



(1) 9, 3, 5 (2) 12, 3, 8 (3) 8, 3, 12

04. 6 பெண்கள் 8 நாட்களில் செய்யும் வேலையை 4 நாட்களில் முடிக்க எத்தனை பெண்கள் தேவை?

(1) 10 பெண்கள் (2) 8 பெண்கள் (3) 12 பெண்கள்

A.M.SANOOS
www.lkedu.lk

05. மின்சாரப் பாவனைக் கட்டணம் கணக்கிடும் போது முதல் அலகு 30 இற்கு ரூபா 1.00 வீதமும், அடுத்த 15 அலகுகளுக்காக ஓர் அலகுக்கு ரூபா 2.00 வீதமும், அதற்கடுத்த ஓர் அலகுக்கு ரூபா 3.00 வீதமும் அறவிடப்படும். அதற்கமைய மின்சார அலகுகள் 65 இற்கு அறவிட வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

(1) ரூபா 100.00 (2) ரூபா 120.00 (3) ரூபா 135.00

06. சிறுவன் ஒருவன் சோடா மூடிகளைச் சேகரித்தான். அவ்வாறு சேகரித்த மூடிகள் 36 ஆகும். 6 மூடிகளுக்கு ஒரு முழுச் சோடாப் போத்தல் ஒற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் எனின், அவனால் மொத்தமாகப் பெறக்கூடிய ஆகக் கூடிய சோடா போத்தல்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 8 (2) 7 (3) 6

07. ஓர் அதிசயக் கூடையில் உள்ள பழங்கள் ஒவ்வொரு நிமிடமும் இரட்டிப்பாகும். 30 நிமிடத்தில் அக்கூடை நிரம்பி விட்டால், அக் கூடையில் அரைவாசி எப்போது நிரம்பியிருக்கும்?

(1) 29 நிமிடத்தில் (2) 25 நிமிடத்தில் (3) 15 நிமிடத்தில்

08. ஒருவர் 25 வினாக்களைக் கொண்ட வாய்மொழி வினாப்போட்டியில் கலந்து கொள்கிறார். இவர் சரியாகப் பதிலளிக்கும் ஒரு வினாவுக்கு 4 புள்ளிகள் வழங்கப்படும். பிழையாகப் பதிலளிக்கும் ஒரு வினாவுக்குப் பெற்ற புள்ளியிலிருந்து 2 புள்ளிகள் குறைக்கப்படும். எனின், 64 புள்ளிகளைப் பெறும் ஒருவர் எத்தனை வினாக்களுக்கு சரியான விடை அளித்திருப்பார்?

(1) 21 (2) 20 (3) 19

09. ஒரு சதுர வடிவமான மைதானத்தில் பக்கமொன்றில் 5 கம்பங்கள் காணப்பட்டன. இரண்டு கம்பங்களுக்கு இடையில் ஒரு மின்குமிழ் தொடுக்கப்பட்டால் எத்தனை மின்குமிழ்கள் தேவைப்படும்?

(1) 16 (2) 19 (3) 20

10. என்னிடம் ரூ.100 இருக்கிறது. எனது தம்பிக்கு ரூ.30 ஐக் கொடுத்தால் இருவரிடமும் உள்ள பணம் சமனாக இருக்கும். எனின், எனது சகோதரனிடம் முதலில் இருந்த பணம் எவ்வளவு?

(1) ரூ.70 (2) ரூ.50 (3) ரூ.40

11. ஒரு பெட்டியில் 35 பென்சில்கள் உள்ளன. நீலப் பென்சில்களைப் போல் இரண்டு மடங்கு சிவப்புப் பென்சில்களும், சிவப்புப் பென்சில்களைப் போல் இரண்டு மடங்கு பச்சைப் பென்சில்களும் இருந்தால் பெட்டியிலுள்ள சிவப்புப் பென்சில்கள் எத்தனை?

(1) 20 (2) 10 (3) 5

A.M.SAMOOS

www.lkedu.lk

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 13

சுட்டெண் : ..... 30 நிமிடம்

01. மனிதன் ஒருவன் படம் ஒன்றைக்காட்டிப் பின்வருமாறு கூறினான். "எனக்கு சகோதரனோ, சகோதரியோ இல்லை. இருந்த போதும் இப்படத்தில் இருப்பவரின் தந்தை எனது தந்தையாரின் புதல்வர் ஆவார்." இம்மனிதன் யாருடைய படத்தைக் காட்டினான்?

(1) தனது தந்தையின் (2) தனது (3) தனது மகனின்

02. பிரசன்னா படம் ஒன்றினைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான். "இந்தப் படத்தில் இருப்பவரின் தந்தை எனது அம்மாவின் தந்தை ஆகும்." அப்படியானால் படத்தில் காணப்படுபவருக்கும் பிரசன்னாவிற்கும் இடையில் உள்ள உறவு முறை யாது?

(1) மாமா (2) சிறிய தந்தை (3) பாட்டன்

03. ஒரு மாணவனின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 500 மீற்றர் ஆகும். அவன் காலையில் பாடசாலைக்குச் செல்லும் போது மொத்தத் தூரத்தில் அரைவாசிக்குச் சென்று திரும்பி வீட்டுக்கு வந்து மறுபடியும் பாடசாலைக்குச் சென்றான். அவன் சென்ற மொத்தத் தூரம்?

(1) 750 மீற்றர் (2) 1000 மீற்றர் (3) 1250 மீற்றர்

04. குமரன், சுதன் ஆகிய இருவரும் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஒரே இடத்தில் அமர்ந்திருந்தனர். குமரன் அவ்விடத்திலிருந்து முதலில் வடக்கு நோக்கி 50 மீற்றரும் பின்னர் தனது வலப் பக்கத்துக்குத் திரும்பி 100 மீற்றரும் சென்றான். சுதன் முதலில் மேற்கு நோக்கி 25 மீற்றரும் பின்னர் தனது வலக்கைப் பக்கத்துக்குத் திரும்பி 50 மீற்றரும் சென்றான். இப்போது அவர்கள் இருவருக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு?

(1) 75 மீற்றர் (2) 125 மீற்றர் (3) 225 மீற்றர்

- கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களினதும் எழுத்துக்களினதும் நிரையைக் கொண்டு விடையைத் தெரிவு செய்க.

5	5	K	6	6	J	K	K	5	S	J	5	B	J	8	J
R	R	6	5	K	R	K	6	J	J	6	S	S	6	J	J

05. இலக்கங்களும் எழுத்துக்களும் உள்ள இந்நிலையில் எத்தனை J எழுத்துக்கள் உள்ளன?

(1) 10 (2) 9 (3) 8

A.M.SANOOS

www.lkedu.lk

06. இங்கு மிகக் குறைவாகக் காணப்படுவது எது?

(1) இலக்கம் 8 (2) எழுத்து K (3) இலக்கம் 6

07. இங்கு ஒரு இலக்கத்திற்கு முன்னும் பின்னும் ஒரே வகை எழுத்துக் காணப்படுகிறது. அந்த எழுத்து யாது?

(1) எழுத்து J (2) எழுத்து K (3) எழுத்து R

- குறிப்பிட்ட ஒரு மாகாணத்தில் 5 ஆம் தரத்தில் கற்கும் மாணவர்கள் தொடர்பாகச் செய்யப்பட்ட ஆய்வின் போது தவணைப் பரீட்சை ஒன்றில் ஒவ்வொரு பாடசாலையிலும் 1, 2, 3, 4, 5 ஆம் இடங்கள் பெறப்பட்டுள்ள விதம் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

64 பாடசாலைகளில் இந்த ஐந்து இடங்களும் பெறப்பட்டுள்ள விதம் பின்வருமாறு ஆண் - பெண் - பெண் - ஆண் - பெண்
37 பாடசாலைகளில் இந்த ஐந்து இடங்களும் பெறப்பட்டுள்ள விதம் பின்வருமாறு பெண் - ஆண் - ஆண் - பெண் - பெண்

இத் தகவல்களைப் பயன்படுத்தி 08 தொடக்கம் 11 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.

08. இந்த 101 பாடசாலைகளிலும் தவணைப் பரீட்சையில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களில் ஆண் பிள்ளைகள் எத்தனை பேர்?

(1) 91 (2) 202 (3) 320

09. இந்த 101 பாடசாலைகளிலும் தவணைப் பரீட்சையில் முதல் ஐந்து இடங்களையும் பெற்ற மாணவர்களில் இரண்டாம் இடத்தையும் ஐந்தாம் இடத்தையும் பெற்ற பெண் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(1) 192 (2) 165 (3) 111

10. இந்த 101 பாடசாலைகளிலும் தவணைப் பரீட்சையில் முதல் ஐந்து இடங்களையும் பெற்ற மாணவர்களில் ஆண், பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு இடையிலான வித்தியாசம் எவ்வளவு?

(1) 101 (2) 192 (3) 303

11. இந்த 101 பாடசாலைகளிலும் தவணைப் பரீட்சையில் முதல் ஐந்து இடங்களையும் பெற்ற மாணவர்களில் மூன்றாம் இடத்தையும் நான்காம் இடத்தையும் பெற்ற ஆண் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(1) 202 (2) 165 (3) 101

A.M.SANOOS
www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 14

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. ஆரபி, அருணவி, ஆரணா, அபிராமி ஆகியோரில் அருணவியைக் காட்டிலும் ஆரணா இளையவள் ஆயினும் அவள் ஆரபியைக் காட்டிலும் மூத்தவள் அபிராமி ஆரணாவின் அக்கா எனின் இவர்களில் இளையவர் யார்?

(1) ஆரபி (2) ஆரணா (3) அருணவி

02. மதனின் தந்தை சுதனின் மகன் எனின், சுதனுக்கும் மதனுக்கும் இடையேயான உறவு முறையே,

(1) பாட்டன் - பேரன் (2) பேரன் - பாட்டன் (3) தந்தை - மகன்

03. பேனா ஒன்றின் விலை ரூபா 10.00 ஆகும். பென்சில் ஒன்றின் விலை ரூபா 7.00 ஆகும். வசந்தன், ரூபா 51.00 ஐச் செலுத்தி சம எண்ணிக்கையில் பேனாக்களும் பென்சில்களும் வாங்கினான். எனின், அவன் வாங்கிய பென்சில்கள் எத்தனை?

(1) 3 (2) 4 (3) 5

04. சிறிய சக்கரம் ஒன்று நான்கு தடவைகள் சுழலும் போது பெரிய சக்கரம் ஒரு தடவை சுழலும் எனின் சிறிய சக்கரம் 14 தடவைகள் சுழலும் போது பெரிய சக்கரம் எத்தனை தடவை சுழலும்?

(1) 4 (2) 4 இலும் அதிகம் (3) 4 இலும் குறைவு

05. சதுர வடிவக் காணியொன்றைச் சுற்றி 32 கம்பங்கள் நடப்பட்டிருந்தன. எனின், ஒரு பக்கத்தில் நின்று பார்க்கும் போது தென்படும் கம்பங்கள் எத்தனை?

(1) 7 (2) 8 (3) 9

06. 400இன் அரைவாசியின் அரைவாசியுடன் 5இன் இரு மடங்கைக் கூட்டினால் கிடைக்கும் விடை,

(1) 105 (2) 110 (3) 210

07. வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

திங்கள், வியாழன், ஞாயிறு, புதன் .....

(1) வெள்ளி (2) சனி (3) ஞாயிறு

A.M.SANOOS

www.lkedu.lk

08. குறித்த மாதத்தின் முதலாம் நாள் புதன்கிழமை எனின் அம்மாதத்தில் உள்ள வியாழக்கிழமைகளின் உயர்ந்தபட்ச கூட்டுத்தொகை யாதாக இருக்க முடியும்?

(1) 75 (2) 80 (3) 85

09. பின்வரும் அறிவுறுத்தலுக்கு அமைய விடையைத் தெரிவு செய்க.

- 10இலும் குறைந்த ஓர் இலக்கத்தை எழுதுக
- அதனை இரண்டு மடங்காக்குக
- அதிலிருந்து இரண்டைக் கழிக்குக
- கழித்த பின் மூன்றினால் பெருக்குக
- அதனை ஆறினால் வகுக்குக

இப்போது விடை முதலில் நீங்கள் எழுதிய,

(1) இலக்கத்திற்குச் சமம்

(2) இலக்கத்தை விட ஒன்று அதிகம்

(3) இலக்கத்தை விட ஒன்று குறைவாகும்

10. 3476, 3746, 3674, 3647, 3467 ஆகிய எண்களை ஏறுவரிசைப்படுத்தும் போது நடுவில் வரும் இலக்கத்தை பின்னாலிருந்து முன்னால் எழுதினால் கிடைக்கும் விடை,

(1) 3467 (2) 7463 (3) 7643

11. அக்காவின் தம்பி எனது அண்ணா. எனது தங்கையின் அண்ணா நான். எனவே நாங்கள் எத்தனை பேர்?

(1) 4 (2) 5 (3) 6

12. ஒரு வாங்கில் நானும் நண்பர்களும் அமர்ந்து இருக்கிறோம். வலது பக்கத்திலிருந்து எண்ணினால் நான் ஐந்தாவதாகவும் இடது பக்கத்திலிருந்து எண்ணினால் ஏழாவதாகவும் இருக்கிறேன். எனின், நாங்கள் எத்தனை பேர் வாங்கில் அமர்ந்திருக்கின்றோம்?

(1) 10 பேர் (2) 11 பேர் (3) 12 பேர்

13. சூரியன் மறையும் வேளை நான் வடக்குத்திசை நோக்கிச் சென்றால் எனது நிழல் எனக்கு எப்பக்கத்தில் விழும்?

(1) வலப்பக்கம் (2) இடப்பக்கம் (3) முன்னால்

14. ஒருவன் ரூபா 30 இற்கு 12 மாம்பழங்களை வாங்கினான். அடுத்த நாள் ஒரு மாம்பழம் 50 சதத்தினால் அதிகரித்தால், முதல் நாள் மாம்பழங்களை வாங்கிய பணத்திற்கு எத்தனை மாம்பழங்களை தற்போது வாங்க முடியும்?

(1) 10 (2) 8 (3 6

A.M.SANOOS

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 15

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**


01. ஒரு மாணவன் நாற்று மேடையில் இருந்து வாங்கிய மரக்கன்றுகள் பற்றிய விபரத்தை பின்வருமாறு முன் வைத்தான்.

பழ மரக்கன்று - 15	பழமரமல்லாத கன்று - 20
மாங்கன்று - 7	தென்னங்கன்று - 8

இதன்படி அவன் வாங்கிய மொத்தக் கன்றுகள் எத்தனை?

(1) 30 (2) 35 (3) 50

02. பின்வரும் உருவை கண்ணாடி முன்பாக காட்சிப்படுத்தும் போது தோன்றக்கூடிய விம்பத்தைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

03. ஒரு நகரில் ஆண்கள் பாடசாலை, பெண்கள் பாடசாலை, கலவன் பாடசாலை என மொத்தம் 30 பாடசாலைகள் உள்ளன. இதில் 18 பாடசாலைகளில் ஆண் பிள்ளைகள் கற்கின்றனர். 21 பாடசாலைகளில் பெண் பிள்ளைகள் கற்கின்றனர். எனின், கலவன் பாடசாலைகள் எத்தனை உள்ளன?

(1) 39 (2) 12 (3) 9

04. பாதையொன்றை அமைப்பதற்கு 4 மனிதர்களுக்கு 10 நாட்கள் தேவை என கணக்கிடப்பட்டது. இதே வேலையை 5 மனிதர்களைப் பயன்படுத்தினால் எத்தனை நாட்களில் முடிப்பர்?

(1) 5 நாட்கள் (2) 8 நாட்கள் (3) 10 நாட்கள்


05. வயலொன்றில் வேளாண்மை வெட்ட 3 பெண்களுக்கு 5 நாட்கள் எடுக்கும். அதே வேலையை 5 பெண்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?

(1) 2 நாட்கள் (2) 3 நாட்கள் (3) 4 நாட்கள்

A.M.SANOOS
www.lkedu.lk


■ **தாயக்கட்டை தொடர்பானவை**

தாயக்கட்டையில் நேரடியாகத் தெரியக்கூடிய முகங்கள் எதிர் பக்கமாக வராது.

06. 

ஒரு சதுர முகியின் பல்வேறு பக்கங்கள் இவ்வாறு காட்டப்பட்டுள்ளன. எழுத்து **W** இற்கு எதிரே இருக்கும் படத்தில் உள்ள எழுத்து யாது?

(1) K (2) B (3) P

07. 

ஒரு சதுரமுகியின் பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன. இலக்கம் 5 இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள இலக்கம் யாது?

(1) 4 (2) 3 (3) 2

■ A, B, C, D, E எனும் ஆங்கில எழுத்துக்களைக் குறிக்க முறையே 1, 2, 3, 4, 5 ஆகிய இலக்கங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

08. C A B + B C A

அருகிலுள்ள கணிதச் செய்கையின் விடையாக அமைவது,


(1) B D C (2) E C D (3) E D C

09. C D E − B A A

அருகிலுள்ள கணிதச் செய்கையின் விடையாக அமைவது,

(1) A B D (2) A C D (3) D B A

10. பின்வரும் கோலத்தை ஒன்றன் மீது ஒன்றை வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிக.



உரு A உரு B (1) (2) (3)

11. நீலம், சிவப்பு, மஞ்சள் என்ற ஒழுங்கில் 31 கொடிகள் தொங்கவிடப்பட்டுள்ளன. மத்தியில் உள்ள கொடியின் நிறம் யாது?

(1) சிவப்பு (2) நீலம் (3) மஞ்சள்

A.M.SANOOS
www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை 5


செயலட்டை - 16

சுட்டெண் : ..... 30 நிமிடம்

■ சிறிய சதுர மரக்குற்றிகளை ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி பெரிய சதுரமுகி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பெரிய சதுரமுகியைச் சுற்றி வர்ணம் பூசப்பட்டுள்ளது.

01. ஒரு பக்கம் வர்ணம் பூசப்பட்ட சிறிய சதுர வடிவ மரக்குற்றிகள் எத்தனை?

(1) 4 (2) 6 (3) 12



02. இரு பக்கம் வர்ணம் பூசப்பட்ட சிறிய சதுர வடிவ மரக்குற்றிகள் எத்தனை?

(1) 6 (2) 12 (3) 16

03. மூன்று பக்கம் வர்ணம் பூசப்பட்ட சிறிய சதுர வடிவ மரக்குற்றிகள் எத்தனை?

(1) 4 (2) 6 (3) 8

04. ஒரு பக்கமும் வர்ணம் பூசப்படாத சிறிய சதுர வடிவ மரக்குற்றிகள் எத்தனை?

(1) 1 (2) 2 (3) 4

■ பின்வரும் தகவலைப் பயன்படுத்தி விடை தருக.

1kg மாசி + 250g பருப்பு
ரூபாய் 280.00

250g பருப்பு + 500g சீரகம்
ரூபாய் 180.00

1kg மாசி + 500g சீரகம்
ரூபாய் 300.00

05. 1kg மாசியின் விலை யாது?

(1) ரூபாய் 100.00 (2) ரூபாய் 200.00 (3) ரூபாய் 280.00

06. 2kg மாசி + 250g பருப்பு இன் விலை எவ்வளவு?

(1) ரூபாய் 280.00 (2) ரூபாய் 380.00 (3) ரூபாய் 480.00

A.M.SANOOS
www.lkedu.lk

07. தந்தையார் மாம்பழத்தையும், அன்னாசிப்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் தோடம்பழத்தை விரும்புவதில்லை. தாயார் தோடம்பழத்தையும், மாம்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் அன்னாசிப்பழத்தை விரும்புவதில்லை. நான் விளாம்பழத்தையும், மாம்பழத்தையும் விரும்புகின்றேன். நாம் மூவரும் விரும்பும் பழம் எது?

(1) விளாம்பழம் (2) தோடம்பழம் (3) மாம்பழம்

- **மகேஸ், சுரேஸ், முகேஸ் ஆகிய மூவரும் தனித்தனியாக ரூபா 81.00 ஐக் கையில் வைத்துக்கொண்டு விளையாடுகிறார்கள்.**
- **இவர்கள் ஒவ்வொரு முறை தோற்கும் போதும் தம்மிடமுள்ள பணத்தில் $\frac{1}{3}$ ஐ வென்றவருக்கு வழங்க வேண்டும்.**

08. முதல் மூன்று ஆட்டங்களிலும் முகேஸ் அடுத்தடுத்து தோற்றால் அவனிடம் எஞ்சியுள்ள பணம் எவ்வளவு?

(1) ரூபாய் 54.00 (2) ரூபாய் 36.00 (3) ரூபாய் 24.00

09. சுரேஸ் நான்காவது முறையும் அடுத்தடுத்து தோற்றிருந்தால் அவனிடம் எஞ்சியுள்ள பணம் யாது?

(1) ரூபாய் 24.00 (2) ரூபாய் 16.00 (3) ரூபாய் 8.00

10. ஆசிரியர், மாணவர்களின் பரீட்சை இலக்கங்களாக 001 இலிருந்து 100 வரையும் உள்ள எண்களை அவர்களுக்கு கொடுக்க விரும்பினார். எந்தவொரு மாணவனும் கூட்டுத்தொகை 12 ஆக வரும் எந்த எண்ணையும் ஏற்க விரும்பவில்லை. அத்தகைய எண்கள் எத்தனை மாணவர்களுக்குக் கிடைத்திருக்கும்?

(1) 5 (2) 6 (3) 7

11. தேகாரோக்கியத்துடன் இருக்கும் ஒரு யானைப் பந்தியில் உள்ள யானைகளின் தந்தங்களினதும் கால்களினதும் கூட்டுத்தொகை 132 ஆகும். அப்பந்தியில் உள்ள யானைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 22 (2) 32 (3) 66

12. வாகன தரிப்பிடமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மோட்டார் வண்டி, முச்சக்கர வண்டி என்பவற்றின் எண்ணிக்கை 13 ஆகும். அவ்வண்டிகளிலுள்ள சில்லுகளின் மொத்த எண்ணிக்கை 47 ஆகும். எனின், தரப்பிடத்திலுள்ள மோட்டார்வண்டிகளின் எண்ணிக்கை யாது?

(1) 5 (2) 7 (3) 8

A.M.SANOOS

www.lkedu.lk

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020


அறிவுத்தாரகை

5

செயலட்டை - 17

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. 

இவ்வுருவை சதுரமாக்குவதற்கு எத்தனை சிறிய சதுரங்களை சேர்க்க வேண்டும்?

(1) 10 (2) 8 (3) 5

02. 2020 ஆம் ஆண்டு சம்மந்தமாக கூறப்படும் சரியான கூற்று

(1) 19ம் நூற்றாண்டுக்குரிய ஆண்டாகும்

(2) 20ம் நூற்றாண்டுக்குரிய ஆண்டாகும்

(3) 21ம் நூற்றாண்டுக்குரிய ஆண்டாகும்

■ **கூட்டிலுள்ள எண்களை அவதானித்து வினாக்களுக்குரிய விடையினைக் காண்க.**

10	11	12	13	14	15	16	17	18	19	20	22

03. இதில் இரட்டை எண்களும் ஒற்றை எண்களும் சமமாவதற்கு யாது செய்ய வேண்டும்?

(1) ஒற்றை எண்ணிலிருந்து ஒன்றை இரட்டை எண்ணுக்கு வழங்குதல்

(2) இரட்டை எண்ணிலிருந்து ஒன்றை ஒற்றை எண்ணுக்கு வழங்குதல்

(3) இரட்டை எண்ணிலிருந்து இரண்டை ஒற்றை எண்ணுக்கு வழங்குதல்


04. இக்கூட்டில் மூன்றினால் பிரிபடக்கூடிய எண்கள் எத்தனை உண்டு?

(1) 5 (2) 4 (3) 3


05. கீழே தரப்பட்டுள்ளவாறு செவ்வக வடிவான கடதாசியை இரண்டாக மடித்து இரு தாளின் ஊடாகவும் துளையிட்ட பின் மீண்டும் விரித்தால் தோன்றும் விதம் எது?




உரு A




உரு B



(1)



(2)



(3)

A.M.SANOOS
www.lkedu.lk

06. தாவீதுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் புதன்கிழமையும் விடுமுறை கிடைக்கும். அவரின் மனைவிக்கு ஒன்றுவிட்ட ஒருநாள் விடுமுறை கிடைக்கும். இன்று ஞாயிற்றுக்கிழமை. இருவருக்கும் விடுமுறை கிடைத்துள்ளது. இவற்றிற்கு அமைய பின்வரும் கூற்றுக்களிடையே மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) அடுத்த ஞாயிற்றுக்கிழமை இருவருக்கும் விடுமுறை கிடைக்கும்.

(2) இன்னும் எட்டு நாட்களில் அவர்கள் இருவருக்கும் விடுமுறை கிடைக்கும்.

(3) அடுத்த வியாழக்கிழமை தாவீதின் மனைவிக்கு மட்டும் விடுமுறை கிடைக்கும்.

07. 4 மனிதர்கள் ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் நடந்து 16 கிலோமீற்றர் தூரம் சென்றனர். எனின்,ஒரு மணித்தியாலத்தில் ஒரு மனிதன் நடந்த தூரம் எவ்வளவு?

(1) 1 கிலோமீற்றர் (2) 4 கிலோமீற்றர் (3) 5 கிலோமீற்றர்

♦ பின்வரும் பந்தியை வாசித்து **09** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

"நான் தற்போது சுகமாக உள்ளேன். நான் இங்கு வந்தவுடன் கடிதம் போடாமைக்கு என்னை மன்னிக்கவும். எனது விடுதியில் நானும் எனது சிங்கள நண்பர்கள் மூவரும் இருக்கின்றோம். உங்களையெல்லாம் விட்டு தூர இடத்தில் வாழ்வது கவலைதான். எனது படிப்புத் தவிர்ந்த வேறு நேரங்களில் பகுதி நேர வேலைக்குச் சென்று விடுவேன். அதிக நேரம் பகுதி நேர வேலைக்குச் செல்வதிலேயே செலவளிக்கின்றேன்."

08. இக்கடிதத்தை எழுதியிருப்பவர் தற்போது இருப்பது வெளிநாட்டிலாகும்?

(1) சரி (2) பிழை (3) சரி பிழை கூறமுடியாது

09. இக்கடிதம் அவரது வீட்டில் உள்ள ஒருவருக்கே எழுதப்பட்டுள்ளது?

(1) சரி (2) பிழை (3) சரி பிழை கூறமுடியாது

10. இக்கடிதத்தை எழுதியவர் கல்விக்காக வீட்டை விட்டு வேறு இடத்தில் வசிப்பவராவார்?

(1) சரி (2) பிழை (3) சரி பிழை கூறமுடியாது

11. 1 இற்கும் 20 இற்கும் இடையே உள்ள எண்களுள் 2, 3 என்னும் இரு எண்களினாலும் மிகுதி இன்றி வகுபடக்கூடிய முக்கோண எண்கள் எத்தனை உள்ளன?

(1) 1 (2) 2 (3) 3

12. 1 தொடக்கம் 30 வரையுள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?

(1) 455 (2) 465 (3) 475

A.M.SANOOS

www.lkedu.lk

ஆசிரியர்: ஏ.எம். சனூஸ்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020


அறிவுத்தாரகை

5

செயலட்டை - 18

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● பின்வரும் கோட்டுப் படங்களின் உதவியுடன் **01, 02** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




01. மாம்பழங்கள் 3 இனதும் தோடம்பழங்கள் 5 இனதும் விலை யாது?

(1) ரூபா 44 (2) ரூபா 58 (3) ரூபா 66

02. மாம்பழம் 1 இனதும் தோடம்பழம் 1 இனதும் விலை யாது?

(1) ரூபா 11 (2) ரூபா 14 (3) ரூபா 18

● கீழே காணப்படும் உருவை அவதானித்து **03** முதல் **05** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையைத் தெரிவு செய்க.



03. வட்டத்திற்கு மட்டும் உரிய இலக்கம் எது?

(1) 6 (2) 5 (3) 1

04. வட்டத்திற்கும், சதுரத்திற்கும் மட்டுமே உரிய இலக்கங்கள் யாவை?

(1) 6, 5 (2) 7, 6 (3) 8, 7

05. சதுரம், முக்கோணம், வட்டம் ஆகிய மூன்றுக்கும் பொதுவான இலக்கம் எது?

(1) 4 (2) 6 (3) 8

A.M.SANOOS
www.lkedu.lk

06. மூன்றாவது முக்கோண எண்ணினதும் மூன்றாவது சதுர எண்ணினதும் கூட்டுத் தொகையானது,

(1) ஓர் இரட்டை எண்ணாகும்.

(2) நான்கின் மடங்காகும்.

(3) 3, 5 ஆல் மாத்திரம் வகுபடும் ஓர் ஒற்றை எண்ணாகும்.

07. கமலிடம் உள்ள பணத்திலும் பார்க்க ரூபா 45.00 கூடுதலாக முருகேசிடம் உண்டு. இருவரிடமும் உள்ள பணம் ரூபா 105.00 ஆகும். கமலிடம் உள்ள பணத்தைக் காண்க?

(1) ரூபா 30.00 (2) ரூபா 60.00 (3) ரூபா 75.00

08. ஒரு தோட்டத்தில் 3 இதழ் பூக்களும், 5 பூக்களுமாக மொத்தம் 15 உள்ளன. அவற்றின் மொத்த இதழ்களின் எண்ணிக்கை 63 எனின், அங்குள்ள 3இதழ், 5இதழ் பூக்களின் எண்ணிக்கை முறையே,

(1) 6, 9 (2) 9, 6 (3) 10, 5

09. ஒருவன் 3 மாத்திரைகளை 30 நிமிடத்துக்கு ஒரு தடவை உட்கொண்டான். அவனுக்கு மூன்று மாத்திரைகளையும் உட்கொள்வதற்கு எடுக்கும் நேரம் எவ்வளவு?

(1) 1 மணித்தியாலம் (2) 1மணித்தியாலம் 30 நிமிடம்

(3) 2 மணித்தியாலம்

- பின்வரும் தகவலை அடிப்படையாகக் கொண்டு **10, 11, 12** ஆகிய வினாக்களுக்கு விடையைத் தெரிக.
  - ♦ குமாரிடம் உள்ள பணத்தைப் பார்க்கிலும், இரு மடங்குப் பணம் சந்திரனிடம் உள்ளது.
  - ♦ குமார், சந்திரன் ஆகியோரிடமுள்ள மொத்தத் தொகை அனுலாவிடம் உள்ள பணத் தொகைக்குச் சமன்.
  - ♦ சந்திரன் குமாருக்கு ரூபா 100 கொடுத்த பின், சந்திரனிடமுள்ள மொத்தத் தொகை ரூபா 300 ஆகும்.

10. அனுலாவிடம் உள்ள மொத்தத் தொகை எவ்வளவு?

(1) ரூபா 600 (2) ரூபா 500 (3) ரூபா 400

11. மூவரிடமும் இருந்த மொத்தத் தொகை எவ்வளவு?

(1) ரூபா 600 (2) ரூபா 1000 (3) ரூபா 1200

12. குமாரிடம் உள்ள மொத்தத் தொகை எவ்வளவு?

(1) ரூபா 100 (2) ரூபா 200 (3) ரூபா 300

A.M.SANOOS
www.lkedu.lk

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை

5

செயலட்டை - 19

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01, 02 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களையும் சேராதது யாது?

01. வட்டம், கனவுரு, செவ்வகம், சதுரமுகி, செங்கோணம், நான்முகி

(1) நான்முகி (2) வட்டம் (3) செங்கோணம்

02. வானொலி, பத்திரிகை, நூலகம், கணினி, துண்டுப்பிரசுரம், தொலைக்காட்சி

(1) நூலகம் (2) கணினி (3) துண்டுப்பிரசுரம்

03, 04 ஆகிய வினாக்களில் உள்ள பழமொழிகளின் கருத்தை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க.

03. 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'

(1) ஒற்றுமையே பலம்

(2) விடாமுயற்சி பலன் தரும்

(3) பலசாலியும் தோல்வி அடையலாம்

04. 'இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை'

(1) உலோபங் கூடாது

(2) திருப்தியற்ற மனம்

(3) மன நிறைவே சிறந்த செல்வம்

05. கஜனின் தங்கை ரூபிகா ஆவாள். அவளுக்கு மூன்று சகோதரர்களும் இரு சகோதரிகளும் உள்ளனர். கஜனுக்கு இருக்கும் சகோதரர்களின் எண்ணிக்கையும் சகோதரிகளின் எண்ணிக்கையும் யாவை?

(1) சகோதரர்கள் 2, சகோதரிகள் 2

(2) சகோதரர்கள் 2, சகோதரிகள் 3


(3) சகோதரர்கள் 3, சகோதரிகள் 3

A.M.SANOOS
www.lkedu.lk

06. □ + □ = 18 ஆகவும் △ + 4 = □ ஆகவும் △ + □ = ○ இருப்பின் ○ + □ + △ இன் பெறுமானம் யாது?

(1) 23 (2) 26 (3) 28

07. கீழே தரப்பட்டுள்ள இரு உருக்களுக்கும் ஏற்ப (A) அளவுள்ள ஓர் அட்டைத் தாளிலிருந்து (B) அளவுள்ள எத்தனை வட்டங்களை உயர்ந்தபட்சம் வெட்டலாம்?



(1) 24 (2) 28 (3) 32

08. ஒரு பாத்திரத்தில் $\frac{3}{4}$ பங்கு தண்ணீர் உள்ளது. அப்பாத்திரத்தினுள் மேலும் 2 லீற்றர் தண்ணீரை ஊற்றியதும் பாத்திரம் முற்றாக தண்ணீரால் நிரம்பியது. அப்பாத்திரத்தில் ஆரம்பத்தில் இருந்த நீரின் கனவளவு யாது?

(1) 4 லீற்றர் (2) 6 லீற்றர் (3) 8 லீற்றர்

09. மின் அலங்காரச் சரமொன்றில் உள்ள சிவப்பு நிற மின்குமிழ் 3 நிமிடங்களுக்கு ஒரு தடவையும் பச்சை நிற மின்குமிழ் 5 நிமிடங்களுக்கு ஒரு தடவையும் ஒளிரும். பிற்பகல் 11.15 இற்கு இரு நிற மின்குமிழ்களும் ஒன்றாக ஒளிர்ந்தன. அவை இரண்டும் ஒன்றாக ஒளிரும் இரண்டு சந்தர்ப்பங்கள் எவை?

(1) பி.ப. 11.20 உம் பி.ப. 11.25 உம்

(2) பி.ப. 11.30 உம் பி.ப. 11.45 உம்

(3) பி.ப. 11.35 உம் பி.ப. 11.50 உம்

10. மாலை வேளையில் நான் வீட்டிலிருந்து விளையாட்டு மைதானத்திற்குச் செல்லும் போது எனது நிழல் எனக்கு முன்னால் சென்றதாயின், நான் எத்திசை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன்?

(1) மேற்கு (2) கிழக்கு (3) தெற்கு

AMSANOOS
www.lkedu.lk

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2020

அறிவுத்தாரகை 5

செயலட்டை - 20

சுட்டெண் : ..... 30 நிமிடம்

● பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. ஒருவர் தனது மாத வருமானத்தில் 3/10 பங்கை உணவுக்காகவும் 2/10 பங்கை வைத்தியத்திற்காகவும் 1/10 பங்கை ஆடம்பரத்திற்காகவும் செலவிட்டார். அவரிடம் மிகுதியாக இருந்த பணம் ரூபா 6000 எனின், குறித்த நபரின் மாத வருமானம் எவ்வளவு?

(1) ரூ. 20000 (2) ரூ. 15000 (3) ரூ. 10000

02. ஒருவர் 50 வினாக்களைக் கொண்ட வாய்மொழி வினாப் போட்டியில் கலந்து கொள்கிறார். இவர் சரியாகப் பதிலளிக்கும் ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வழங்கப்படும். பிழையாகப் பதிலளிக்கும் ஒரு வினாவுக்குப் பெற்ற புள்ளிகளிலிருந்து ஒரு புள்ளி குறைக்கப்படும். எனின், 85 புள்ளிகளைப் பெறும் ஒருவர் எத்தனை வினாக்களுக்கு சரியான விடை அளித்திருப்பார்?

(1) 45 (2) 43 (3) 40

03. கிளி, புறா ஆகிய பறவைகளை அபிமேனா வளர்த்து வந்தாள். அவள் வைக்கும் தானியங்களை கிளி 10 நிமிடத்திற்கு ஒரு தடவையும், புறா 15 நிமிடத்திற்கு ஒரு தடவையும் கொத்தித் தின்னும். இரு பறவைகளும் காலை 8.10 இற்கு தானியங்களை ஒன்றாக கொத்தியது எனின், மறு படியும் இரு பறவைகளும் எத்தனை மணிக்கு ஒன்றாக கொத்தித் தின்னும்?

(1) காலை 8.25 (2) காலை 8.30 (3) காலை 8.40

04. நாதனுக்கு வேகமாக ஓட முடியும். குகன் திலீபனை விட வேகமாக ஓடினான். காந்தன் குகனை விட வேகமாக ஓடினாலும் நாதனை வெற்றி கொள்ள முடியாது. ரஞ்சன் மிக வேகமாக ஓடினாலும் திலீபனை வெற்றி கொள்ள முடியாது.
தரப்பட்டுள்ள தகவலின் படி குறைந்த வேகத்திலிருந்து கூடிய வேகத்திற்கு ஓடக் கூடியவர்களை ஒழுங்குபடுத்தினால்,

(1) நாதன், காந்தன், குகன், திலீபன், ரஞ்சன்
(2) நாதன், திலீபன், ரஞ்சன், காந்தன், குகன்
(3) ரஞ்சன், திலீபன், குகன், காந்தன், நாதன்

A.M.SANOOS
www.lkedu.lk

● தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

முகில்கள் இல்லாத நீலவானம் அழகு தந்தது
முழு நிலவின் ஒளி எங்கும் பரவியுள்ளது
இதழ் விரித்து நீலோற்பலம் மலர் மலர்ந்தது
இதமான தென்றல் எம்மைத் தழுவிச் சென்றது.

05. இப்பாடலில் உள்ள பெயரடைமொழி ஒன்று,

(1) தழுவி (2) ஒளி (3) நீல

● நாதன், நகுலன் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 58kg எனவும் நந்தினி, நகுலன் ஆகிய இருவரினதும் நிறைகளினதும் கூட்டுத்தொகை 63kg எனவும் நாதன், நகுலன், நந்தினி ஆகிய மூவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 94kg எனவும் தரப்பட்டிருப்பின்,

06. நாதனின் நிறை எவ்வளவு?

(1) 36kg (2) 31kg (3) 27kg

07. நந்தினி, நாதன் ஆகியோரின் நிறைகளின் கூட்டுத் தொகை எவ்வளவு?

(1) 58kg (2) 63kg (3) 67kg

08. ஒரு வியாபாரி, ஒன்று ரூபா 5.00 வீதம் ரூபா 400 இற்கு மாம்பழங்களை வாங்கினான். முதல் நாள் ஒரு மாம்பழத்திற்கு வாங்கிய விலையை விட ரூபா 2.00 இலாபம் வைத்து அரைப்பங்கை விற்றான். மீதியை மறுநாள் ரூபா 1.00 இலாபம் வைத்து சகல மாம்பழங்களையும் விற்பனை செய்தான். இவ்வியாபாரத்தில் அவன் பெறும் இலாபம் எவ்வளவு?

(1) ரூ. 160.00 (2) ரூ. 120.00 (3) ரூ. 80.00

09. கடிகாரம் 4.30 மணியைக் காட்டியது. உண்மையிலே கடிகாரம் 10 நிமிடங்கள் முந்தி ஓடுகிறது. ஆயினும் 10 நிமிடங்கள் பிந்தி ஓடுவதாக நினைத்து நேரத்தை சீர் செய்தேன். தற்போது கடிகாரம் சரியான நேரத்தை விட எவ்வளவு நிமிடங்கள் வித்தியாசத்தைக் காட்டுகிறது?

(1) 10 நிமிடங்கள் (2) 20 நிமிடங்கள் (3) 30 நிமிடங்கள்

10. தந்தை ஒருவர் தன்னிடத்தில் இருந்த பணத்தில் அரை பகுதியை உணவுக்காகச் செலவழித்தார். அதன் பின்னர் அவர் மீதிப் பணத்தை நான்கு சம பகுதிகளாகப் பிரித்து அவற்றில் மூன்று பகுதியை ஆடைகள் வாங்கச் செலவழித்தார். அவர் ஆடைகள் வாங்கச் செலவழித்த பணம் ரூ.4500 ஆகும். எனின், அவரிடமிருந்த மீதிப்பணம் எவ்வளவு?

(1) ரூபா 6000 (2) ரூபா 3000 (3) ரூபா 1500

A.M.SANOOS
www.lkedu.lk

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2020
அறிவுத்தாரகை

விடைகள்

செயலட்டை - 01

01. (3)	**02.** (3)	**03.** (i) (1)	(ii) (3)	**04.** (i) (2)	(ii) (1)	**05.** (2)
06. (2)	**07.** (i) (2)	(ii) (1)	**08.** (i) (1)	(ii) (3)	**09.** (i) (3)	(ii) (1)
10. (i) (3)	(ii) (1)	**11.** (3)				

செயலட்டை - 02

01. (3)	**02.** (1)	**03.** (2)	**04.** (i) (2)	(ii) (3)	(iii) (3)	**05.** (2)
06. (2)	**07.** (1)	**08.** (3)	**09.** (1)	**10.** (2)	**11.** (3)	**12.** (2)
13. (3)	**14.** (i) (1)	(ii) (2)	(iii) (3)	**15.** (1)		

செயலட்டை - 03

01. (3)	**02.** (2)	**03.** (3)	**04.** (1)	**05.** (2)	**06.** (3)	**07.** (3)
08. (3)	**09.** (3)	**10.** (1)	**11.** (1)	**12.** (1)	**13.** (2)	**14.** (3)
15. (1)	**16.** (2)					

செயலட்டை - 04

01. (1)	**02.** (1)	**03.** (3)	**04.** (1)	**05.** (2)	**06.** (2)	**07.** (2)
08. (3)	**09.** (1)	**10.** (3)	**11.** (2)	**12.** (1)	**13.** (3)	**14.** (1)
15. (2)						

செயலட்டை - 05

01. தக்காளி	**02.** பாட்டி	**03.** பலகை	**04.** சோறு	**05.** கோபம்	**06.** (2)	**07.** (3)
08. (3)	**09.** (2)	**10.** (3)	**11.** (2)	**12.** (2)	**13.** (3)	**14.** (2)
15. (2)	**16.** (1)	**17.** (1)	**18.** (3)	**19.** (1)	**20.** (3)	**21.** (3)
22. (1)	**23.** (2)	**24.** (2)				

செயலட்டை - 06

01. (2)	**02.** (1)	**03.** (3)	**04.** (3)	**05.** (3)	**06.** (1)	**07.** (1)
08. (2)	**09.** (2)	**10.** (3)	**11.** (1)	**12.** (3)	**13.** (3)	

செயலட்டை - 07

01. (1)	**02.** (3)	**03.** (1)	**04.** (2)	**05.** (1)	**06.** (3)	**07.** (2)
08. (3)	**09.** (3)	**10.** (2)	**11.** (2)			

செயலட்டை - 08

01. (1)	**02.** (2)	**03.** (3)	**04.** (3)	**05.** (2)	**06.** (1)	**07.** (2)
08. (2)	**09.** (2)	**10.** (3)	**11.** (2)	**12.** (1)		

செயலட்டை - 09

01. (2)	**02.** (2)	**03.** (3)	**04.** (2)	**05.** (1)	**06.** (1)	**07.** (2)
08. (3)	**09.** (2)	**10.** (1)	**11.** (3)	**12.** (4)	**13.** (2)	

செயலட்டை - 10

01. (2)	**02.** (1)	**03.** (3)	**04.** (1)	**05.** (3)	**06.** (3)	**07.** (2)
08. (1)	**09.** (1)	**10.** (3)	**11.** (2)			

செயலட்டை - 11

01. (2)	**02.** (3)	**03.** (2)	**04.** (1)	**05.** (1)	**06.** (3)	**07.** (2)
08. (3)	**09.** (3)	**10.** (2)	**11.** (2)	**12.** (1)	**13.** (3)	**14.** (1)
15. (2)	**16.** (2)	**17.** (2)	**18.** (2)	**19.** (3)	**20.** (3)	**21.** (1)
22. (1)	**23.** (3)					

A.M.SANOOS

www.lkedu.lk

செயலட்டை - 12

01. (1)	**02.** (3)	**03.** (1)	**04.** (3)	**05.** (2)	**06.** (2)	**07.** (1)
08. (3)	**09.** (1)	**10.** (3)	**11.** (2)			

செயலட்டை - 13

01. (3)	**02.** (1)	**03.** (2)	**04.** (2)	**05.** (3)	**06.** (1)	**07.** (1)
08. (2)	**09.** (2)	**10.** (1)	**11.** (3)			

செயலட்டை - 14

01. (1)	**02.** (1)	**03.** (1)	**04.** (3)	**05.** (3)	**06.** (2)	**07.** (2)
08. (2)	**09.** (2)	**10.** (3)	**11.** (2)	**12.** (1)	**13.** (2)	**14.** (1)

செயலட்டை - 15

01. (2)	**02.** (3)	**03.** (3)	**04.** (2)	**05.** (2)	**06.** (2)	**07.** (3)
08. (3)	**09.** (2)	**10.** (1)	**11.** (2)			

செயலட்டை - 16

01. (2)	**02.** (2)	**03.** (3)	**04.** (1)	**05.** (2)	**06.** (3)	**07.** (3)
08. (3)	**09.** (2)	**10.** (3)	**11.** (1)	**12.** (3)		

செயலட்டை - 17

01. (1)	**02.** (3)	**03.** (2)	**04.** (3)	**05.** (1)	**06.** (3)	**07.** (2)
08. (3)	**09.** (3)	**10.** (1)	**11.** (1)	**12.** (2)		

செயலட்டை - 18

01. (2)	**02.** (2)	**03.** (3)	**04.** (1)	**05.** (3)	**06.** (3)	**07.** (1)
08. (1)	**09.** (1)	**10.** (1)	**11.** (3)	**12.** (3)		


செயலட்டை - 19

01. (3)	**02.** (1)	**03.** (1)	**04.** (2)	**05.** (2)	**06.** (3)	**07.** (2)
08. (2)	**09.** (2)	**10.** (2)				

செயலட்டை - 20

01. (2)	**02.** (1)	**03.** (3)	**04.** (3)	**05.** (3)	**06.** (2)	**07.** (3)
08. (2)	**09.** (2)	**10.** (3)				

- *** -



M.SANOOS
www.lkedu.lk